Registered as a News Paper in Ceylon
P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி ௴ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சுஎ] யாழ்ப்பாணம்:- மன்மத௵ சித்திரைமீ கசுஉ வெள்ளிக்கிழமை (29 APR. 1955) [இல - ௬]

காப்பியக் கலைக்கா

## 6 ............ ......சோகத்தின் நடுவே கண்ட தெய்விக வனப்பு!'

### இலங்கையர்கோனின் பணிவில் — சீதையின் சீற்ற மொழியில் — மனோபாவ அழகுச் செறிவு

### நயனங்கள் செய்த நற்றவம்.........!

காட்சிப் படலத்தை ஓவியம்போலச் சமைத்திருக்கும் கம்பன் திறத்தினால் சீதாபிராட்டியின் தெய்வீக தரிசனத்தைச் சோகத்தின் நடுவே கண்ட அனுமனின் நயனங்கள் மட்டுமல்ல கம்பனைச் சுவைக்கும் ஒவ்வொருவருடைய நயனங்களும் நல்ல தவம் செய்திருக்க வேண்டும் என்றுதான் தோன்றுகின்றது. முதலாவதாகப் பெரும்பிரிவு நிலையில் பிராட்டியின் துயரமே உருவமான தோற்றம் ஒரு பெரும் தெய்வீக வனப்புடன் விளங்கக் காண்கிறோம். நல்லவர்கட்கு வரும் துன்பத்தை அவர்கள் புன்சிரிப்போடு பொறுத்துக் கொள்வதில் ஏதோ பக்திக்குரிய அழகு ஒன்று இருக்கிறதல்லவா? அதே அழகு இங்கே தேவியின் பிரிவுத் தோற்றத்திலும் திகழ்கிறது. அந்த அழகு எல்லையற்ற பரப்புடையது.

'துப்பினுற் செய்த கையோடு
கால்பெற்ற துளிமஞ்சு
ஒப்பினுன்தனை நினைதோறுங்
நெடுங்கண்கள் உகுத்த
அப்பினுல் நனைந்து அருந்துயர்
உயிர்ப்புடை யாக்கை
வெப்பினுற் புலர்ந்து ஒருநிலை
உறுத மென்றுகிலாள்'

(காட்சிப்படலம் - 8)

துப்பு — பவளம்
மஞ்சு — மேகம்
அப்பு — கண்ணீர்
யாக்கை — உடல்
துகில் — ஆடை

என்று இராமனின் திருமேனியழகை உருவெளியில் கண்டு நினைவுகளெல்லாம் அவன் மாயமாய்க் கண்ணீர் வடிக்கும் ஓர் காட்சியைக் கம்பன் சொல்லும்போது அதில்

—மதுரை—
திரு நா. பார்த்தசாரதி

மானசீகமான ஆனல் சோகக் கலப்புடன் கூடிய ஒருவகைக் கவின் இருக்கத்தான் வேண்டுமென இருக்கிறது.

"சுருதி நாயகன் வரும்வரும்
என்பதோர் துணிவால்
கருதி மாதிரம் அனைத்தையும்
அளக்கின்ற கண்ணுள்" (9)

என்று அடுத்த பாட்டில் கூறும்போது அந்தக் கவிதைக் கவின் பன்மடங்கு உயர்வதோடு அல்லாமல் தனிக்காம்பீரியமும்பெற்று விடுகிறது. "உண்ணுதற்கு யார் அடகிடுவரோ? விருந்தினர் வந்தால் என் நாயகன் யான் இன்றி அவரை எவ்வாறு பேணுவானோ?" என்று பிராட்டி நினைப்பதாக வரும் பாடல் கருத்து நுணுக்கம் பொதிந்து தோன்றக் காண்கிறோம். இராமன், 'மெய்த் திருப்பதம் மேவுக' என்றபோதும் 'காடு செல்க' என்றபோதும் சித்திரத்தின் மலர்ந்த செந்தாமரை போல் இருந்த நிலையைச் சீதை நினைப்பதாகக் கம்பர்கூறும் பாடலில் மனோபாவ உண்மையைத் தேடி நல்காவிய இரசிகன் அழுதுவிடுவான். அத்தனை சோகானுபவம்பாடலில இழையூக் [illegible] திரிசடையும் பிற அரக்கியரும் சூழ நடுவே தேவி வீற்றிருந்த நிலையை அனுமன் காண்கின்றான். இதற்குமுன் திரிசடை நன்னிமித்தம் அறிந்துரைத்தலும் கனவு கூறுதலும் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. பின்னர்த்துயின்றுகொண்டிருந்த அரக்கியர் எழுந்து படைகளுடன் திரளுதலும் அவர்களுக்கு நடுவே அனுமன் சீதாதேவியை ஐயமற உற்று நோக்கி மீண்டும் தெளிதலும் கூறப்படுகின்றன. "அறன் இன்னும் அழியவில்லை" என்று கம்பன் அனுமனை எண்ணச் செய்கிறான். பிராட்டியைக் கண்டு அவன் தன் மனத்துள் எண்ணுவதாக வரும் பாடல்களையும் ஆரம்பத்தில் கவிக் கூற்றாக வரும் பாடல்களையும் ஒரு சேர நோக்கினால் துன்பத்தின் தெய்வீக வனப்பால் இக் காட்சிப் படலமும் காண்டப்பெயருக்கு ஏற்றதாகிறது.

### கொடுமைக்கு முன்னால் ..........!

அனுமன் அசோக வனத்தில் நிகழ்வனவற்றையும

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

### ஏழாலையிற் பலிநிறுத்தம்

சுன்னாகம் ஐயனார் கோயில் முன்மாதிரியை ஏழாலை இலந்தைபிட்டிப் புதுவைரவசுவாமி கோயில் பின்பற்றியிருக்கின்றது. இந்த ஆண்டு தொடக்கம் அக்கோயிலில் பலியிடுதல் நிறுத்தப்பெற்றிருக்கின்றதென்று அறியத்தந்து சைவ அன்பர்களை ஒத்துழைக்கும் படியும் கேட்டு மேற்படி கோவில் பரிபாலகர் திரு. ச இளையதம்பி அவர்கள் ஓர் அறிவித்தல் வெளியிட்டிருக்கின்றார்,

### உலக சமாதானப் பரிசு யாருக்கு?

பாண்டுங் மகாநாட்டில்பண்டித நேரு அவர்கள் உலகசமாதானத்துக்காகச் செய்த சேவை ஒப்பற்றதென்று புகழ்ந்து பாராட்டி அவருக்கே உலகசமாதன நோபல் பரிசு இம்முறை கொடுப்பது முறையாகுமென்று பாண்டுங் மகாநாட்டு அறிக்கை பற்றிய கருத்தைத் தெரிவிக்கும் பொழுது ஸ்ரீ இராசகோபாலாச்சரியார் அவர்கள் கூறினர்.

### ஆசிய ஆபிரிக்க மகாநாடு

இப்பொழுது பாண்டுங்கில் நடந்து நிறைவெய்திய ஆசிய ஆபிரிக்க மகாநாடு அடுத்த முறை 1956-ம் ஆண்டில் கூடுயாம்.

## திருக்குறளில் சைவசித்தாந்தம்

அகில இலங்கைச் சைவ மகாநாட்டில் "திருவள்ளுவர்" என்னும் பொருள் பற்றி கலாநிதி வ. பொன்னையா அவர்கள் பேசும் போது, திருவள்ளுவர் எச் சமயத்தவர்? திருக்குறள் புகட்டும் வாழ்க்கை முறைகள் சைவ சமயத்தைச் சார்ந்தவையா? அல்லவா? என்று எம்நாட்டில் இன்று பலவிடங்களில் எழுப்பப் படுகின்ற கேள்விகளுக்கு மறுமொழிகள் கூறுவார் போன்று தன் கருத்துக்களைத்தெரிவித்தார். அவர் பேசும்போது "திருக்குறளில் நால்வகை வழிபாட்டு முறைகள் இல்லை என்று சிலர் சொலலுகிறார்கள் அதில் சித்தாந்தப் பண்புகள் யாவும் நிரம்பிக்கிடக்கின்றன" என்று அவர் திட்டவட்டமாகக் கூறினர். மேலும் பேசும்போது "காவடியெடுத்து விரதமனுட்டித்தல் என்பனவற்றைத தவறானவை என்று சிலர் சொல்வதுமுண்டு இந்த விரதங்கள் அன்பு நிலையைக் காட்டுகின்றன. இவை முத்தியையே நேரே கொடுக்காவிடினும் நிச்சயமாக அவற்றுக்கேற்ற பயனைக் கொடுக்கும். அன்பு நிலையே சைவத்தின் உயிர் நாடி என்பதை யாவரும் ஒத்துக்கொள்வர். இதை உடையதான் சைவ சித்தாந்தம் ஞான நிலையைக் கொடுக்குமளவிற்குச் சிறந்து விளங்குகின்றது" என்று கூறினர்.

## தமிழ் மொழியில் பூசை

### சைவ மகாநாட்டில் திரு. நடேசன் தரும் கருத்து

அகில இலங்கைச் சைவமகாநாட்டில் தலைமை வகித்துப் பேசும்போது, இன்று சிந்தனைக்கு வந்திருக்கும் "தமிழ்மொழியில் பூசை" என்னும் பொருளில் அமைச்சர் திரு சு. நடேசன் அவர்கள் தன் கருத்துக்களைத் தெரிவித்தார். அவர் பேசும்போது

இந்தியாவில் இப்பொழுது தோன்றியுள்ள நாஸ்திக இயக்கம் மேற்றிசை நாடுகளில் 18-ம் நூற்றாண்டிலே தோன்றியது. அது விஞ்ஞானத்துக்கு ஒத்து வாரமையினுல் கைவிடப்பட்டதாகும். அப்படி மேனுடுகள் கைவிட்ட கொள்கையை இப்பொழுது தமிழ் நாட்டு இளைஞர்கள் பின்பற்றியிருப்பதற்குக் காரணம் பிராமணத்துவேஷமே தவிர அடிப்படையான வேறுகாரணங்கள் எதுவுமில்லை.

சைவசமயம் அநாதியானது. அதனைப் பாதுகாக்கத் தேவையில்லை. சைவசமயத்தை நமது உள்ளங்களில் நிலைநிறுத்திக் கொள்ளுவதிலேயே கவனம் செலுத்த வேண்டும். வாழ்க்கையின் இலட்சியம் இறைவனோடு சேர்ந்து இன்பம் பெறுவதே. அதை இந்த உலகத்திலேயே நாம் அடைந்து விடலாம். வாதங்கள் ஒருபோதும் பயனளிக்க மாட்டா. தென்னிந்தியாவில் தர்க்கங்கள் தலையெடுத்திருப்பதற்குக் காரணம் அரசியல் மொழிக் கருத்து வேற்றுமைகளாகும். இத்தகைய அசம்பாவிதங்கள் நல்லகாலத்தால் நம் நாட்டில் தலைகாட்டவில்லை. வடமொழி — தமிழ்மொழித் தகராறுகள் நம் நாட்டில் இல்லை. சில பிராமணர்கள் தமிழ் மொழியைப் பழித்துக் கூறியதினால் வடமொழி மீது ஒரு துவேஷம் வளர்ந்து வருகிறது, இவ்வித பிணக்குகள் நம் நாட்டிலில்லாதபடியினால் அவற்றைப் பற்றி இங்கு விவாதிப்பது வேண்டாத காரியம். இந் நாட்டில் இல்லாதவைகளைப் பற்றி நாம் இங்கு என் கிளப்பி விவாதிக்கவேண்டும்?

ஆலயங்களில் தமிழில் அர்ச்சனைகள் செய்யவேண்டுமா அல்லது வடமொழியில் அர்ச்சனை செய்யவேணடுமா என்ற பிரச்சினை நம்நாட்டில் சமீப காலத்தில்தான் தோன்றியிருக்கின்றது. இவ் விஷயத்தில் நாவலர் வாக்கு வேதவாக்காகும். தமிழில் நால்வர் பாடிய பாடல்கள் இறைவனிடம் நம்மைக் கொண்டு செல்லும் ஆற்றல் வாய்ந்தவைகளென்றாலும் அவற்றை மட்டும் பாடிப் பூசை செய்யவேண்டுமென்று வறபுறுத்துவது அவசியமாக எனக்குத் தோன்றவில்லை.

நாயன்மார்களுடைய காலத்துக்கு முன்பும ஆலயங்களில் அர்ச்சனைகள் நடைபெற்று வந்தன. அந்தப் பாரம்பரியத்தை விடாமல் நடத்தவேண்டுமென்பதற்காகவே வடமொழியில் இன்னமும பூசைகள் நடக்கின்றன. இந்த வழக்கத்தைக் கைவிடக்கூடாது. தமிழிலும் பூசைகள் நடக்கலாம். 'சைவசமயம் ஒரு பெரிய கட்டடம் போன்றது. அதைச் சீர்திருத்த முயற்சிப்பவர்கள் கட்டிடத்தை இடித்துத் தரைமட்டமாக்கவே முயறசிக்கிறார்கள். இலட்சியப் பாதையை விட்டு விலகாமல் நாம நடக்தால் இந்தக் கட்டிடம இடிக்கப்பட்டு விடுமோ என்று சஞ்சலப்படத தேவையேயில்லை' என்று சொன்னர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்.
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையக முந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். மன்மத ஹு சித்திரை மீ கசு உ வெள்ளிக்கிழமை

## தொடர்ந்து செய்யப்பட வேண்டிய தொண்டு

சென்ற வெள்ளிக்கிழமை சைவ மகாநாட்டிலே தலைமை வகித்துப் பேசும்பொழுது வடமாகாண அதிபர் திரு ம. ஸ்ரீ காந்தா அவர்கள் யாழ்ப்பாணத்துக்கப்பால் இப்பொழுது குடியேற்றப்படும் இடங்களிலும் சைவப் பிரசாரம் செய்யப்படுதல் வேண்டும் என்று மிகப் பொருத்தமாகக் குறிப்பிட்டதை இங்கு நாம் எடுத்துக் காட்ட விரும்புகின்றோம். இருபத்தொரு ஆண்டுக்குட்பட்ட மாணக்கர்களை ஒருமதத்திலிருந்து இன்னொரு மதத்துக்கு ஏற்றுக்கொள்ளுதல் சட்ட விரோதமாககப்படுதல் வேண்டுமென்று சைவ மகாநாட்டிற் கொண்டுவரப்பெற்ற முடிவை ஆதரித்துப் பேசிய, பிரமஸ்ரீ S. இராமச்சந்திர ஐயர் அவர்களும் மலைநாட்டுப் பகுதியில் வாழ் சைவர்களுக்கு, பிரசாரம் செய்வார் ஒருவருமில்லையே யென்றும், ஆங்கு சைவ அன்பர்கள் சென்று மத வளர்ச்சிக்காகும் முயற்சிகள் எடுத்தல் அத்தியாவசியமென்றும் கூறினர். சைவமகாநாடுகள் பெரும்பான்மையும் யாழ்ப்பாணத்திலேயே நடைபெறுவதுண்மையே. குடிசனச் செறிவு இங்கேயுள்ளமையே இதற்குக் காரணம். எனினும் சைவபரிபாலன சபையார் சமய வளர்ச்சிக்காக யாழ்ப்பாணத்துக்கப்பாலும் முயற்சி செய்தல்வேண்டும். ஆண்டுக்கொருமுறைகூடிச் சொற்பெருக்காற்றிவிடும் அளவில் நின்றுவிடுதல்கூடாது. சைவப்பிள்ளைகள் சைவப் பள்ளிக்கூடங்களிலேயே கல்வி பயின்று வரவும் அக்கழகங்களிலே சமய வளர்ச்சிக்கான முறையில் மதபோதனை செய்யப்படவும் ஒழுங்குகள் நன்கு அமைக்கப்பெற்றால் புறமதம் புகுத்தும் தீமை புறங்காணப்படும் என்பது திண்ணம்.

சைவ மகாநாட்டிலே எவ்வகையான எதிர்ப்புமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்ட முடிபுகள் யாவும் செய்கைமுறையிற் கொண்டுவரப் பெற்றால் சைவபரிபாலன முயற்சிகள் நன்கு நடைபெறுகின்றன வென்பதற்கு அது சான்றாகும்.

சைவசமயக் கலைஞானம் ஆரம்ப நடுத்தரப் பாடசாலைத் தேர்வுக்கு மட்டும் பாடமாக இருத்தல் போதாது. உயர்தரத் தேர்வுகளுக்கெல்லாம் சைவ மாணக்கர்கள் தங்கள் மத ஞானம் நிரம்பப் பெற்றவர்களாயிருத்தலும் வேண்டப்படுமே யானால் வாழ்க்கையைச் சைவச் சால்புக்கிணங்க இவர்கள் நடத்துவதற்கு அத்தகைய அறிவு நல்லபயிற்சியளிக்கும் என்பதை யார்தான் மறுப்பர்?

தனிப்பட்ட முறையிலே சமயக் கல்லூரி ஒன்றை நிறுவுதற்குச் சைவ பரிபாலன சபையார் முன்வருதல் வேண்டுமென்ற முடிவு சைவ அன்பர்களால் ஆர்வத்துடன் வரவேற்கப்படும் என்பதற்கையமின்று.

திருக்கேதீச்சரத் திருப்பணி வேலைக்குப் பேராதரவு புரிதல் சைவர்கள் பெருங்கடன் ஆகும் என்று சைவ மகாநாடு ஊக்கமளித்திருப்பது நற்பலன் கொடுக்கும் என்று நம்புகின்றோம்.

நான்கு நாட்களும் இறைவன் திருவருளால் நன்கு நடைபெற்ற சைவ மகாநாட்டின்பேறு தொடர்ந்து ஆற்றப்படும் தொண்டிலேயே தங்கியிருக்கிறது என்பதைமட்டும் நாம் ஞாபகப்படுத்துகின்றோம்.

# ஆறுமுகப் பெருமானின் அருள் பெறு நெறி

முருகன் பெருமையைப் பற்றிப் பேசும்போது திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் எடுத்தாண்ட பொருள் நயத்தை அடிப்படையாகக் கொண்டு ஆறுமுகப் பெருமானின் பரத்துவத்தை யெடுத்து இனிது விளக்கினர். மேலும் முருகப் பெருமானின் ஆறு திருமுகங்களைப்பற்றிக் கூறும்போது திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தர் கலிவெண்பா என்னும் பிரபந்தங்களிலுள்ள நுட்பங்களை ஆராய்வுரையாகத் தொகுத்துக் காட்டினர்.

முருகன் திருவருள் பெறுவதற்கு திருப்புகழ் சிறந்த சாதனம் என்பதை நலம்பெறக் கூறினர்.

தொடர்ந்து பேசுகையில் திரு. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் முன்னொரு சந்தர்ப்பத்திலே தமிழிலேதான் பூசைசெய்தல் வேண்டுமென்று தாம் சொற்பொழிவாற்றியதாகப் பத்திரிகையில் வெளிவந்துள்ளது தவறென்றும் தாம் அவ்வாறு உரைக்கவில்லையென்றும் வடமொழி அறிந்தோரும் மொழியிலும் தமிழ் அறிந்தோர் தமிழ்த் தோத்திரங்களைச் செய்தும் வழிபடலாம் என்பதே தாம் ஆங்குக் கூறியதென்றும் தம்மீது நேர்ந்த ஐயப்பாட்டை விளக்கிச் சொன்னார்.

### சிவனடியும் சிவனடியாரும்

சிவனடி என்னும் பொருள் பற்றி ஸ்ரீ மு. ஞானப்பிரகாசம் அவர்கள் பேசும்போது சிவனடி என்னும் பொருளிற பொதிந்திருக்கும் சிறப்புக்களை விளக்குவதற்கு சிவனடியாரையின்றி வேறுவழியில்லையெனக் காட்டி திருத்தொண்டர் புராணத்திலே கூறப்பெற்ற சிவனடியார் சிறப்புக்களை உணர்ச்சி மீதூர எடுத்துக் காட்டிச் சென்றார். உலகியலிலே காணப்படும் பாச பந்த அன்பு போலாகாது திருவருள் வழிநின்று திருவருளாலே உளதாகும் அன்பு ஒவ்வொருவர்மாட்டும் வேண்டப்படுவதென்பதை அப்பொழுது வற்புறுத்தினர்.

# யுத்த நெருக்கடி தீர்க்க மருந்து
## சைவச் சால்பிலேதான் இருக்கிறது

அகில இலங்கைச் சைவ மகாநாட்டின் இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சிகளுக்கு வடமாகாண அரசாங்க அதிபர் ஸ்ரீ ம. ஸ்ரீகாந்தா அவர்கள் தலைமை வகித்தார். தமது தலைமையுரையில் "ஆறுமுகநாவலரது அடிச்சுவட்டில் சென்று நாம் நமது சமயத்தில் ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்க வேண்டும், எமது பிள்ளைகளுக்குச் சைவத்தைப்பற்றி நன்கு கற்பிக்கவேண்டும். அப்படிக் கற்பித்தால்தான் நமது வருங்கால சமூகம் சைவத்தில் திளைத்துக்காணப்படும்

"நாங்கள் தவம் செய்தவர்கள். ஆனதினாலேதான் சைவர்களாகப் பிறந்தோம். பண்டைக்காலத்தில் தமிழர்கள் சைவத்தைப் பன்னெடும் நாடுகளில் சென்று பரப்பியுள்ளார்கள். இந்தோநேசியா தாய்லந்து முதலிய இடங்களில் எல்லாம் தமிழர்கள் சைவத்தைப் பரப்பியுள்ளார்கள் என்பதைச் சரித்திரமூலமாகவும் காட்சிப் பிரமாணத்தாலும் அறிகின்றோம். இன்றும் தாய்லாந்தில் முடிசூட்டு வைபவம் முதலியவற்றில் திருவெம்பாவை முதலியன பாடப்படுகின்றன என்பவற்றை அறியும்போது அக்காலத் தமிழர்கள் சைவத்தை எவ்வளவு தூரம் பரப்பியுள்ளனர்; எவ்வளவு தூரம் அப்பணியில் ஈடுபட்டனர் என்பதை நாம் அறிகின்றோம். சமயத்தைப் பரப்புவதற்கு முதல் சைவத்தில் எமக்கு ஆர்வம் வேண்டும். இந்த ஆர்வம் என்பது எம்மிடத்தில் உதயம் செய்யுமானால் உலகம் முழுவதுமே நாம் சைவத்தைப் பரப்ப முடியும். இன்று உலகமெல்லாம் சமயப்புரட்சி நடைபெறுகின்றது யுத்தநெருக்கடி உலகெங்கும் இன்று தோன்றியிருக்கிறது. இந்த யுத்த நெருக்கடியைத் தீர்க்கும் மருந்து சைவத்தில்தான் இருக்கிறது. அந்த மருந்துதான் அன்பு.

யாழ்ப்பாண மக்கள் ஆனையிறவைத் தாண்டி வன்னிப் பகுதிகளில் போய்க் குடியேறுகிறார்கள். அவர்கள் குடியேறுமிடமெல்லாம் சைவப் பாடசாலைகளும் சைவ ஆலயங்களும் தோற்றுவிக்கவேண்டும். அவர்களுக்குச் சைவ சமய அறிவைப் புகட்ட வேண்டும். பிறசமயத்தவர்கள் இந்தவகையில் எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள்.

சும்மா இருந்துகொண்டு சைவம் வளரும், வளர வேண்டும் என்பதில் எவ்வித பயனுமில்லை! இப்படியான தொண்டாற்ற ஒரு பெரிய சைவப் பொதுத் தாபனம் வேண்டும். அத் தாபனத்துக்குக் கட்டுப்பட்டு ஒன்று சேர்ந்து சைவர் எல்லோரும் சமயப் பணி ஆற்ற வேண்டும் என்று கூறினர்.

பண்டிதை ச. அமிர்தாம்பிகை அவர்கள் "சைவ சமயமும் புறச்சமயமும்" என்னும் பொருள்பற்றிப் பேசும்போது, சைவசமயம் அநாதியானது. அகச் சமயத்திற்கும் புறச்சமயத்திற்கும் வேறுபாடு உண்டு. வேதத்தையும் ஆகமத்தையும் புறம்பாகக் கொள்வன எல்லாம் புறச்சமயம். எல்லாரும் அந்தந்தச் சமய முறைப்படி நின்று ஒழுகினால் அவர்கள் எல்லாரும் சைவ சமயத்தை அடைவார்கள் என்பது நமது முன்னோரின் முடிபு. பல சமயங்கள் காலத்துக்குக் காலம் தோன்றினாலும் அழியாது நிற்பது சைவ மதம் என்றால் அதன் பெருமைதான் என்னே! மேல் நாட்டவரின் சமயத்தில் யாழ்ப்பாணமும் தென்னாடும் பிரவேசித்துக்கொண்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

### அகில இலங்கைச் சைவமகாநாட்டில் நிறைவேறிய
# தீர்மானங்கள்

1. தனது பெற்றாருடைய மதக் கொள்கைகளுக்கு இணங்க வளர்க்கப்படவேண்டும் என்னும் பிறப்புரிமை ஒவ்வொரு பிள்ளைக்கும் உரியது என்பதனால், இலங்கையிலுள்ள அரசினர் பாடசாலைகளிலும், அரசினர் உதவிபெறும் பாடசாலைகளிலும் எல்லா மாணவர்களுக்கும், குறைந்த அளவு ஒரு வாரத்திற்கு இரண்டு மணி நேரமேனும் சமயக்கல்வி பயிற்றுவதற்கு ஒழுங்குகள் செய்யவேண்டுமென்றும், இந்த விதிகளுக்கமையாத மதச்சார்புள்ள வித்தியாசாலைகளுக்கு அரசினர் உதவியளிக்கவொண்ணாதென்றும், இப்பிரமாணம் அரசினர்வித்தியாசாலை உதவி பெறும் வித்தியாசாலைகளுக்கென வகுக்கப்படும் புதிய திட்டத்திற் சேர்க்கப்பட வேண்டுமென்றும் இம் மகாநாடு தீர்மானிக்கின்றது.

2. இம்மகாநாடு சைவ சமயத்தையும், சைவசித்தாந்தத்தையும் கற்பதற்கு ஒழுங்குகள் செய்யும்படியும், மேல்நாட்டுக் கலைஞானம் என்னும் பாடத்திற்குப் பதிலாக இவற்றை ஒரு பாடமாகப் பயிலுவதற்குக் "கலைமாணி" வகுப்பிற் பயிலும் மாணவர்கட்கு வசதியளிக்கவேண்டுமெனவும் இலங்கைப் பல்கலைக்கழக அதிகாரிகளை வேண்டுகின்றது.

3. இம்மகாநாடு சைவ மாணவர்களின் சமய வளர்ச்சிக்கும் சைவசமய ஆசாரப்படி வாழ்க்கை நடாத்துவதற்கும் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் ஒரு சைவ மாணவர் விடுதிச்சாலையையும் சைவ ஆலயத்தையும் விரைவில் நிறுவுதற்கு ஒழுங்குகள் செய்யும் வண்ணம் இலங்கைப் பல்கலைக் கழக அதிகாரிகளை வேண்டுகின்றது.

4. பௌத்த சமயம் இலங்கை "சிவில் சேர்விஸ்" பரீட்சைக்கு ஒரு பாடமாக விதிக்கப்பட்டவாறு 'சைவ சித்தாந்தத்தையும் ஒரு பாடமாக விதிக்கும்படி "சிவில் சேர்விஸ்" பரீட்சைக் குழுவினரை இம்மகாநாடு வேண்டுகின்றது.

5 இம் மகாநாடு இருபத்தொரு வயதிற்கு உட்பட்ட மாணவர்களை மதமாற்றஞ் செய்தல் சட்ட விரோதமான செயலென்று விரைவில் ஒரு சட்டம் வகுக்க வேண்டுமென இலங்கை அரசாங்கத்தாரை வேண்டுகின்றது.

6 பாடல்பெற்ற திருக்கேதீஸ்வர ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்ய முன் வந்திருக்கும் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச்சபைக்கு சைவமக்கள் தங்கள் தங்களால் இயன்ற உதவி செய்யவேண்டுமென இந்த அகில இலங்கைச் சைவமகாநாடு வேண்டுகின்றது.

7. இலங்கையில் மிகப் பழமையானதும், சரித்திர சம்பந்தமானதும், திவ்விய க்ஷேத்திரமுமான திருக்கேதீஸ்வரத்தைப் புனருத்தாரணம் செய்து சமயத்தையும் சன்மார்க்கத்தையும் வளர்க்கப் பெரிதும் முயன்றுவரும் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபைக்கு இலங்கை அரசாங்கம் இதுகாறும் செய்த பல உதவிகளுக்கு இந்த [illegible] நன்றி பாராட்டுவதோடு இன்னும் [illegible] உதவி செய்யவேண்டுமென வேண்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கைச் சைவ மகாநாடு

---------0---------

## நிகழ்ச்சிச் சிறப்புக்கள் பற்றிச் செயலாளர் அறிக்கை

யாழ்ப்பாணஞ் சைவபரிபாலன சபையாரின் ஆதரவில் மேற்படிசபை நாவலர் ஆச்சிரம மண்டபத்திலே அகில இலங்கைச் சைவ மகாநாட்டு நிகழ்ச்சிகள், முந்தியே மேற்படி சைவ மகாநாட்டு நிகழ்ச்சி வரலாற்றிற் குறிப்பிட்ட பிரகாரம் நிகழும் சித்திரைமீ 8-ந் திகதி (21-4-55) வியாழக்கிழமை முற்பகல் ஒன்பதரை மணி தொடக்கமாக நான்கு நாட்களிலும் இறைவனருளால் முறைப்படி இனிது நடைபெற்று நிறைவெய்தியன.

முதனுள் முற்பகல் வித்துவான் கி. வா. ஜகந்நாதன் M. A. அவர்கள் தலைமை வகிக்க ஆசிரியர் திரு. மு. மயில்வாகனமவர்கள் வரவேற்புரை கூறியபின் திரு. அ. ச. ஞானசம்பந்தன் M. A. அவர் "திருவருள்" என்னும் விஷயமாகச் சிறந்த ஒரு பிரசங்கஞ் செய்தார். அன்று பிற்பகல் திரு. அ. ச ஞானசம்பந்தனவர்கள் தலைமை வகிக்க "சிவனடியார்" என்னும் விஷயமாக திரு. மு ஞானப்பிரகாசம B. A. B. Sc. அவர்களும், "சேக்கிழார்" என்னும் பொருள்பற்றி வித்துவான் கி. வா. ஜகந்நாதன் அவர்களும் "சமய வளர்ச்சி" என்னும் விஷயமாக பண்டிதர் வ. மு. இரத்தினேசுவரஐயரவர்களும் நல்ல பிரசங்கங்கள் செய்தனர். அதன்பின் திரு. தா. பொன்னம்பலம் தமது கோஷ்டியாருடன் "அப்பூதியடிகள் நாயனர்" சரித்திரத்தைச்சிறந்தமுறையிற சங்கீத கதாப்பிரசங்கமாகச் செய்தார்.

பிரசங்கங்களின் ஆரம்பத்திலும் ஈற்றிலும் திரு. ச. மறைக்காடதேசிகரும், ஆசிரியர் வே. சங்கரப்பிள்ளை அவர்களும்தேவார திருவாசக முதலிய அருட்பாக்களை இனிது ஓதி வந்தனர்.

இரண்டாம் நாள் 9-ம் தேதி (22-4-55) வெள்ளிக்கிழமை முர்பகல் வடமாகாணத் தலைவர் திரு. ம ஸ்ரீ காந்தா அவர்கள் தலைமை வகிக்க பண்டிதை ச. அமிர்தாம்பிகை B A. "சைவசமயமும் புறச் சமயமும்" என்னும் விஷயமாகவும், டக்டர் த. நல்லைநாதனவர்கள் நிகழ்ச்சி வரல்ாற்றிற் குறித்தபடி அன்று வருவதற்குச் சாத்தியப்படாமையால், சமயோசிதமாக திரு. S. நாகையா B. A. அவர்கள் வேதாகமங்களைக் கைக்கொள்ளுதல் என்னும் விஷயமாகவும், ஸ்ரீமத். வடிவேற்சாமி அவர்கள் "ஆலய வழிபாட்டின் அவசியம்" என்னும் விஷயமாகவும் நல்ல பிரசங்கஞ் செய்தார்கள். அன்று பிற்பகல் கடிததந்திப் பகுதி அமைச்சர் கௌரவ திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் தலைமை வகிக்க திரு. ஆ தியாகராசா M. A., M. Lit. அவர்கள் "சைவசமயம்" என்னும் விஷயமாகவும், பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் 'ஆலய விழாக்கள் உணர்த்தும் உண்மைகளும் அவற்றை நடாத்தும் முறையும் என்னும் விஷயமாகவும், பண்டிதர் இ. நவரத்தினமவர்கள் "தாயுமான சுவாமிகள்" என்னும் விஷயமாகவும், திரு. வே. சோமசுந்தரம் அவர்கள் 'திருப்பாசுரம்" என்னும் விஷயமாகவும் சிறந்த உபந்நியாசஞ்செய்தார்கள், சைவப் பிரசாரகர் திரு. த. குமாரசுவாமிப் பிள்ளை தமது கோஷ்டியாருடன் 'மெய்கண்டதேவர்' வரலாறுபற்றி அங்குக்கூடியிருந்தவர்களுடைய உள்ளத்திலேபக்திரசம்பெருகச் சங்கீத கதாப்பிரசங்கம் செய்தார்.

பிரசங்கங்களின் ஆரம்பத்திலும் ஈற்றிலும் திரு, ச. மறைக்காடதேசிகரும். ஆசிரியர் திரு. வே. சங்கரப்பிள்ளை அவர்களும் தேவாரதிருவாசக முதலிய அருட்பாக்களை இனிது ஓதினார்கள்.

மூன்றாநாள் 10ந் தேதி (23-4-55) சனிக்கிழமை ஸ்ரீமத் ஞா. சபாபதிதேசிகரவர்கள் தலைமை வகிக்க, முற்பகலில், திரு த. முத்துச்சாமிப்பிள்ளையவர்கள் "முருகன் பெருமை' என்னும் விஷயமாகவும், வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ T K. சீதாராம சாஸ்திரிகள், "மந்திரங்களை அந்த மொழியிலேயே ஓதுதல் வேண்டும் — மொழிபெயர்த்துச் சொல்லுதல் கூடாது' என்னும் விஷயமாகவும் சிறந்தபிரசங்கம் செய்தனர். அன்று பிற்பகல் முதல் வேளையிற் பேசவேண்டிய, பண்டிதை த. வேதநாயகியம்மாள், தவிர்த்துக் கொள்ள முடியாத அசந்தர்ப்பகாரணமாக வராதொழிய, சைவப் பிரசாரகர் த. குமாரசுவாமிப்பிள்ளை "சமயமும் சாதனையும்" என்னும் விஷயமாகவும், பண்டிதர் [illegible] இராமசாமி அவர்கள் "[illegible] நூல்களிற் கண்ட சைவம்" என்னும் விஷயமாகவும், ஆசிரியர் பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா "வைரவபரத்துவம்"என்னும்விஷயமாகவும் விரிவான பிரசங்கம் செய்தார்கள். பிரமஸ்ரீ ஐ. முத்துச்சாமிக்குருக்கள் தமது கோஷ்டியாருடன் "வன்னியுங்கிணறும் இலிங்கமும் அழைத்த திருவிளையாடல்' என்னும் விஷயமாக நன்கு கதாப்பிரசங்கஞ் செய்தார். பிரசங்கங்களின் ஆரம்பத்திலும் ஈற்றிலும் திரு. ச. மறைக்காடதேசிகரும், ஆசிரியர் வே. சங்கரப்பிள்ளை அவர்களும் தேவார திருவாசக முதலிய அருட்பாக்களை இனிது ஓதினர்கள்.

நான்கா நாள் 11ம்தேதி (24-4-55) ஞாயிற்றுக்கிழமை திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை (முடிக்குரியகிராமதுரந்தரர்) அவர்கள் தலைமைவகிக்க, முற்பகல் பண்டிதர் திரு. ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை "கச்சியப்ப சிவாசாரியர்" என்னும் விஷயம்பற்றியும், ஆசிரியை அ. சிவயோகம் "காரைக்காலம்மையார் கற்பின் மாட்சி" என்னும் விஷயம் பற்றியும், திரு. வை. நல்லையா அவர்கள் "சைவ ஒழுக்கம்" என்னும் விஷயம்பற்றியும் நல்ல பிரசங்கம் செய்தார்கள்.

பிற்பகல் ஆசிரியர் ச. சுப்பிரமணியம் B .A. அவர்கள் "சைவசமயமலர்ச்சி" என்னும் விஷயம்பற்றியும், கலாநிதி (Dr) வ. பொன்னையா அவர்கள் "திருவள்ளுவர்" என்னும் விஷயம்பற்றியும், திரு நம சிவப்பிரகாசமவர்கள் (பத்திராசிரியர்) "அனபின் திருவுரு" எனனும் விஷயம் பற்றியும், டாக்டர் த. நல்லைநாதனவர்கள் "சிவ பூசை" என்னும விஷயம்பற்றியும அருமையான பிரசங்கம செய்தார்கள். ஆசிரியர் வே. சங்கரப்பிள்ளை தமது கோஷ்டியாருடன் "காரைக்காலம்மையார்"சரித்திரத்தைக் கதாப்பிரசங்கமாகச் செய்தார்.

சைவபரிபாலனசபைத் தலைவரும் அற்றை நாள் மகாநாட்டுத் தலைமை வகித்தவருமாகிய திரு. த. முத்துச்சாமிப்பிள்ளையவர்கள் விசேஷ குறிப்புரையும் பூர்த்தியுரையும் கூறினர் அதன் பின் மகாநாட்டுக் காரியதரிசிகளுள் ஒருவராகிய ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை நன்றி பாராட்டத் தொடங்கி, மேற்படி மகாநாட்டிலே தலைமைவகித்த பெரியார்களுக்கும், பிரசங்கஞ் செய்த அறிஞர்களுக்கும், [illegible] அருட்பா

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## ஆசிரியர்களிடம் சேவை உணர்ச்சி வேண்டும்

காலி ஆசிரியர் விடுமுறை கால வகுப்பிற் பேசும் போது வித்தியாதிகாரி ஸ்ரீ ரீ. டி. ஜயசூரிய ஆசிரியர்களிடம் சேவை உணர்ச்சி வேண்டுமென்று குறிப்பிட்டார்.

"ஆசிரியர்கள் தங்களுடைய கல்வி போதிக்கும் சேவையை நாட்டின் நலத்துக்குச் செய்யும் ஒரு சேவையாகக் கருத வேண்டும். இந்த உணர்ச்சியுடன் அவர்கள் தங்களுடைய சேவைகளைச் செய்யாவிட்டால் பாடசாலை, பரிசோதகர்கள், மாணவர்களை மாத்திரமன்றி நாட்டையே அவர்கள் ஏமாற்றுபவர்களாகி விடுகிருர்கள்"என்று அவர்கூறினர்.

## இசை விழா

யாழ்ப்பாண இரசிக இரஞ்சன சபாவின் நான்காவதாண்டு இசைவிழாவண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராசப்பெருமாள் கோவில் முன்றிலில் அமைக்கப்பட்ட மண்டபத்தில்சென்ற சனிக்கிழமை தொடக்கம் நடைபெற்றது. யாழ்ப்பாண நகரசபைத் தலைவர் காதி எம். எம். சுல்தான் வடமாகாண அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீ காந்தா. இந்தியாவில் இலங்கைத் தூதுவராக இருந்த திரு. சி. குமாரசுவாமி, திரு. எஸ். அம்பிகைபாகன் ஆகியோர் திறப்பாளர்களாக இருந்து சபையின் இசைத் தொண்டை ஆசீர்வதித்தனர்.

## சைவமகாநாட்டில் அறிஞர் அ. ச. ஞானசம்பந்தன்

நாவலர் மண்டபத்தில் அகில இலங்கைச் சைவ மகாநாட்டில் பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள் தலைமை வகித்துப் பேசும் போது நம் சமயவளர்ச்சி குன்றியதோடு மட்டுமன்றிப் பிற சமயம் புகுவோர் தொகையும் அதிகரித்துவிட்டது. சமயத்தை வளர்க்க முடியாவிடினும் மதமாற்றத்தையாவது தடுக்கவேண்டும். சமய அடிப்படைக்கு மாற்றமில்லாத வகையில் காலப்போக்கிற்கு ஏற்ற வகையில் மாற்றம் ஏற்பட்டால் தான் சமயம் வளரமுடியும். மாற்றத்தை விரும்பாத எதுவும் வளர முடியாதென்பதை அழிந்தொழிந்த மேல்நாட்டு நாகரிகங்கள் காட்டுகின்றன.

சைவத்தின் அடிப்படை பண்பாடேயாகும். இதனுல்தான் இன்றும் நம் மதம் உயிரோடிருக்கின்றது. சைவ அடிப்படை எங்கே காணப்படுகிறதோ அங்கு சைவம் வாழும். ஆகவே அதனை முன் வைத்து அன்பைப் பெருக்கவேண்டும். வாழ்க்கையில் அதனைத் தகுந்த முறையில் பயன் படுத்த வேண்டும் என்று கூறினர்.

## வேலணைத் திருமுறை விழா

மூன்றும் நாள் காலை நிகழ்ச்சிகளில் திருமுறைப்பயன், திருமுறைகளில சைவசித்தாந்தம், தென்னவன் பிரமராயன், சம்பந்தர் செந்தமிழ், திருமந்திரம், திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரம், திருமுருகாற்றுப்படை, திருத்தொண்டர் புராணம் என்னும் விஷயங்களில், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, திரு. மு. ஞானப்பிரகாசம், திரு. மு. வைரமுத்து, வித்துவான் க. வேந்தனர், கௌரவ சு. நடேசபிள்ளை, வித்துவான் கி. வா. ஜகந்நாதன், புலவர்மணி சி. பெரியதம்பிப்பிள்ளை, திரு. அ. ச. ஞானசம்பந்தன் ஆகியோர் முறையே பேசினர்.

திரு மு. ஞானப்பிரகாசம் அவர்கள் திருமுறைகளில் சைவசித்தாந்தம என்னும பொருள்பற்றிப் பேசுகையில் "நாம் இன்று பல ஆண்டுகளாக அன்னிய நாகரிகததில் திளைத்திருந்ததினுல் சைவத்தைப்பற்றியோ சைவ சித்தாந்தத்தைப்பற்றியோ படிக்கவோ முன்வருவதுமில்லை முயல்வதுமில்லை. சுதந்திரமடைந்த பின்னுவது நாம் நமது பண்பாடு மதம் என்பவற்றைப் பேணி வளர்க்க முயலவேண்டும்"என்று குறிப்பிட்டார்.

திரு. அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள் பேசும்போது, "சேக்கிழார் அருளிச்செய்த பெரிய புராணத்தில் இலக்கியச் சுவை, பக்திச்சுவை, விஞ்ஞானக்கல்வி, அரசியல் அறிவு யாவும் பொதிந்திருக்கின்றனவென்றும், சைவத்தைப் பாராட்ட வேண்டுமாயின் பெரியபுராணத்தைப் போற்றிப் பாதுகாக்கவேண்டுமென்றும் இந்து ஆலயங்களில் தமிழ் மொழியில் பூசை செய்ய முடியும், தமிழில் பூசை செய்யலாமென்பதற்கு கண்ணப்பநாயனர் சரித்திரமே போதுமான சான்றாகும். சிலகோசாரியர் "எய்திய சீர் ஆகமத்தில் நின்று" பூசைசெய்தார். கண்ணப்பன் தமிழில் வணங்கினர் என்றும் கூறி, ஆனல் முதலில் இறைவன் ஆட்கொண்டது யாரை? கண்ணப்பனையல்லவா? இதைவிட வேறு சான்றுகளும் வேண்டுமா? என்று வினவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகில இலங்கைச் சைவமகாநாடு

3-ம் பக்கத் தொடர்ச்சி

வோதினோர்க்கும் நாள்தோறும் மகாநாட்டிற்கு வந்து அரியபிரசங்கங்களைக் கேட்டும் சபையைச் சிறப்பித்து சென்ற அபிமானிகளுக்கும், நான்கு நாளும் மத்தியான வேளையில் நடந்த அன்னதானத்தின் உபயக்காரர்களாகிய, திருவாளர்கள்: சிறுப்பர் S. கனகசபையவர்கள், கொக்குவில் S.V. சண்முகம்பிள்ளையவர்கள், பெரியகடை வியாபாரம் A. S. சங்கரப்பிள்ளையவர்கள், சி. பசுபதிச்செட்டியார் அவர்கள், நகைவியாபாரம் K. செல்லையாபிள்ளையவர்களாகியவர்களுக்கும், அன்னதானத்துக்காகிய உணவைச் சிறந்த முறையிற்சமைப்பித்துவழங்குவதற்காகிய ஒழுங்குகளைச் செய்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விடுதிச்சாலை அதிபராகிய ஆசிரியர் K. S. சுப்பிரமணியமவர்கள் அவரது உதவியாளராகிய திரு. க. நமசிவாயம் என்பவருக்கும் இம் மகாநாடு முட்டின்றி இனிது நிறைவேறும் பொருட்டுப் பெரும்பொருளுதவி செய்தயாழ்ப்பாணத்திலுள்ள பல கல்லூரிகள், கலாசாலைகளின் தலைமை ஆசிரியர்கள், ஏனைய ஆசிரியர்கள், மற்றைய அபிமானிகள் முதலானவர்களுக்கும் இன்னும் மகாநாட்டின் அபிவிருத்தியை விரும்புவோர் எவருக்கும் முறையே நன்றிகூறினார்.

மேலும் இம்மகாநாடு சிறப்புடன் நடைபெறுதற்கு தங்களால் இயன்ற இயன்ற சேவை செய்தோருள் விசேஷ பாராட்டிற்குரியவர்கள் பின்வருவோராவர்:—

தங்கள் சிரமத்தையும் அரிய நேரத்தையும் பாராட்டாது தாங்களே பொருளையுதவியும் பிறரிடத்திலே பொருள் சேர்த்தும் வழங்கிய திருவாளர்கள் மு. மயில்வாகன உபாத்தியாயர், E. P. இராசையா, ஆசிரியர், வ. கார்த்திகேசு முதலியார் C. முத்துத்தம்பி முதலியோராவர்.

இன்னும் இம்மகாநாடு நிகழ்ந்துள்ள நான்கு நாளும் அன்றன்று செய்ய வேண்டிய கருமங்களைச் செய்வித்துத் தாமே செய்தும் உதவியளித்தவர்களாகிய திருவாளர்கள் E. P. இராசையா அவர்கள், ஆசிரியர் வ. கார்த்திகேசு அவர்கள், மேற்படி ஆசிரமத்திற்குரிய இல்லத்தில்வசிக்கும் ஆ பொன்னுத்துரை முதலியவர்கள் ஆற்றிய தொண்டு சிறப்பாகப் பாராட்டத்தக்கது.

மகாநாடு சம்பந்தமாக வெளியிடவேண்டிய விளம்பரங்களையும் துண்டுப் பத்திரிகைகளையும் அனுமதிச் சீட்டுக்களையும் இன்ன பிறவற்றையும் காலந்தவறாது அச்சிட்டுதவிய எங்கள் சைவப்பிரகாச யந்திரசாலை அதிபர், அங்குள்ள ஏனைய உத்தியோகஸ்தர், தொழிலாளர் என்னுமிவர்களுக்கும், மேற்படி அச்சு யந்திரசாலை புது வருடப்பிறப்புக் காரணமாக விடுமுறை செய்யப்பட, அகில இலங்கைச் சைவமகாநாட்டு நிகழ்ச்சி வரலாற்றுப் பத்திரங்களை விரைவில் அச்சிட்டுத் தந்த ஸ்ரீ காந்தா அச்சக அதிபருக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றி உரித்தாகுக.

இன்னும் இம் மகாநாட்டு நிகழ்ச்சிகளை தத்தம் பத்திரிகையில் வெளியிட்டுப் பரப்பிய இந்துசாதனம், தினகரன், வீரகேசரி, ஈழகேசரி முதலான பத்திராசிரியர்களிடத்தும் நாம் நன்றி காட்டி, மகாநாட்டை எவ்வகையான இடையூறுமின்றி இனிது நிறைவேறச் செய்த இறைவன் திருவருளை வாழ்த்துகிறோம்.

ஆ. தனபாலசிங்கம்
ம. வே. திருஞானசம்பந்தன்
ஷெ மாநாட்டுக்காரியதரிசிகள்




முன்னிதழ்த்தொடர்ச்சி

# நாவலர் வழியில் சைவத்தொண்டு

### சைவமகாநாட்டில் ஆசிரியர் திரு. மு மயில்வாகனம் அவர்களின் வரவேற்புரை

19ம் நூற்றாண்டின் தொடக்கத்திலே உயிரனைய சைவசமயம் அன்னியருடைய ஆட்சியினாலும் அன்னிய மதத்தவர்களுடைய கண்டனங்களாலும் மதமாற்றங்களினாலும் நலிவுற்றகாலத்தில் அதனையும் எங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழியையும் காக்கும் பொருட்டு நமது நாட்டிலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் ஐந்தாம் குரவராகத் தோற்றினார். அவருடைய அரிய சேவைகளை இங்கு விரித்துரைக்கத் தேவையில்லை. அவர் சிவபதமடைந்தபின்பு அவருடைய திருவுள்ளக் குறிப்பின்படி அவருடைய சீடர்களாலும் மாணவர்களாலும் எங்கள் சைவபரிபாலனசபை 1888ம் ஆண்டு தொடங்கப்பட்டது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியைத் தொடங்கியதும் இச்சபையே. 'இந்துசாதனம்' தமிழ் ஆங்கிலப் பிரசுரங்களை அன்று தொடக்கம் சைவசமய அபிவிருத்தியின்பொருட்டு இச் சபை நடத்தி வருகின்றது. ஊர்கடோறும் சைவப் பிரசங்கங்களை இச்சபை நடத்தி வந்தது. இச்சபையைத் தொடங்கிய முன்னோரின் கருத்திற்கிணங்க இச்சபை சைவ வரம்பிகவாது நாவலர் பெருமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தொண்டாற்றி வருகின்றது. இச் சபை வேத சிவாகமங்களை இறைவாக்காகக் கொள்ளவேண்டுமென்ற பிரமாணத்தையுடையது. இப் பிரமாணத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் இச் சபையில் அங்கத்தவர்களாயிருக்க முடியாது.

இக் காலத்திலே நமது நாட்டிலே சமயமென்றால் பெரும்பாலும் வாயளவில் பேசுவதாயும் கையளவில் எழுதுவதாயும் முடிகின்றதேயன்றி மக்கள் சமய வாழ்க்கையை அநுட்டிப்பது அரிதாகும். எங்கள் நாட்டுமக்கள சமயவுண்மைகளைச் சாதனை செய்யும் முறைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற நன்நோக்கத்துடன் நாவலர்பெருமானுடைய ஞாபகமாக ஒரு சைவாச்சிரமத்தை நிறுவ வேண்டுமென எங்கள் சபையார் தீர்மானஞ் செய்தனர். குறித்த தீர்மானத்தை நிறைவேற்றுதற்பொருட்டு நீராவியடியிலுள்ள கல்லூரி வீதியில் 10 பரப்பு அளவுள்ள நிலம் ஒன்றினைச் சபையார் 1945 ம் ஆண்டில் விலைக்கு வாங்கினர். அதில் ஒரு மண்டபத்தை அமைத்து 'நாவலர் மண்டபம்' எனப் பெயரிட்டு அம் மண்டபத்தில் குருபூசைகள், புராணபடனம், சைவப்பிரசங்கம், சமயபாட வகுப்புகள், தீட்சைகள் முதலிய சற்கருமங்களைச் சபையார் நடத்தி வருகின்றனர். இம் மகாநாடுகூடும் இம் மண்டபமே அதுவாகும்.

சைவமக்கள் சைவசமயவுண்மைகளை அறிதற்கும் அவற்றின்படியொழுகுதற்கும் சைவ மகாநாடுகள் இன்றியமையாதனவென்பதை அறிந்து காலந்தோறும் எங்கள் சபை சைவ மகாநாடுகளை நடத்தி வந்தது. நடத்தத் தவறிய காலங்களில் ஏனைய சபைகள் சைவ மகாநாடுகளை நடத்தும்பொழுது அவற்றுக்குத் துணைபுரிந்து வந்தது. சென்ற சில வருடங்களாக யாழ்ப்பாண நகரில் சைவமகாநாடுகள் நிகழாமையை யுணர்ந்து எங்கள் சபையின் நிருவாகசபை இம் மகாநாட்டை நடத்த முன்வந்திருக்கின்றது. இம் மகாநாட்டை நடத்த பண்டிதர் ம. வே. திருஞான சம்பந்தப்பிள்ளை யவர்கள் எடுத்துக்கொண்ட பெருமுயற்சி பாராட்டற்குரியதாகும். இவருடைய பெருமுயற்சி யிலையாயின் இம் மகாநாடு நடைபெறும் சந்தர்ப்பம் ஏற்பட்டிராது.

## நல்லூர் தெற்கு சனசமூக நிலையம்

நல்லூர் தெற்கு ஜனசமூக நிலையத்தின் மூன்றுவது ஆண்டு விழாவும், ஆறுவது வருடப்பிறப்பு விழாவும் ஸ்ரீ. கற்பக விநாயகராலயத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் சித்திரை மீ ௳ (14-4-55) வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது. திரு. C. பொன்னம்பலமவர்கள் தலைமை தாங்கினர். ஆசிரியர் திரு. V. C. பரமானந்தம், சுகாதாரப் பரிசோதகரும் வடமாகாண சனசமூக நிலைய மேற்பார்வையாளருமாகிய திரு. P. நடேசன் ஆசிரியர் திரு. V பரமானந்தன், திரு. S. மகாதேவா, மேற்படி நிலைய உபதலைவரும். திரு T இராசரத்தினம, திரு. V பஞ்சரத்தினம், திரு. M. காசிப்பிள்ளை ஆகியோரால் முறையே ஒற்றுமை, சனசமூகநிலைய வளர்ச்சி, பெண்கள முன்னேற்றம் ஆகிய விஷயங்களில் சிறப்பாகச் சொற்பொழிவுகள் செய்யப்பட்டன. பின்பு பூதத் தம்பி நாடகம் நடிக்கப்பட்டது. ஆசிரியர் திரு. N. சிவசுப்பிரமணியத்தால் யோகாசனப்பயிற்சிகளும் செய்து காண்பிக்கப்பட்டன.

## பத்திரிகைகளின் உயரிய சேவை

### யாழ்ப்பாண விவாக இலாபநிதிச்சங்கக் கூட்டத்தில் ஆசிரியர் திரு. S K. வாளரசனின் சொற்பொழிவு

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி உயர் தரக்கலைமன்றத்தில் மேற்படி சங்கத்தின் உபதலைவர் திரு. வி. யோ. மனுவேற்பிள்ளையவர்கள் தலைமையின் கீழ் 23 4-55ல் கூடப்பட்ட முதலாவது நிர்வாகசபைக் கூட்டத்தில் இலங்கையிலுள்ள பத்திரிகைகள் யாவும் பொது ஜன சேவையில் மிகவும் சிரத்தை காட்டுகின்றனவென்றும் நாட்டின் அபிவிருத்திக்குப் பத்திரிகைகளே மூலகர்த்தாக்களென்றும் ஒவ்வொரு விஷயத்தையும் பத்திரிகைகள் வெளியிடுகின்றனவாகையால் எல்லோரும் சகல நடவடிக்கைகளையும குறைந்த செலவில் அறிய உதவுகின்றனவென்றும் குறிப்பிட்டு, இச்சங்கத்திற்கு ஒருவித விளம்பரமும் தேவையில்லையெனப் பிரேரிக்க திரு. வி. தம்பிராசா, திரு சி. சூசைப்பிள்ளை ஆகியோர் அதனை ஆதரித்துப் பேசுபொழுது இச்சங்க விவகாரங்கள் யாவும் பத்திரிகைகளின் உதவியால் வெளிவந்திருக்கின்றனவென்றும் இதிற சேர்ந்துள்ள ஒவ்வொரு அங்கத்தவர்களையும் ஒத்துழைக்கும்படியும் வேண்டிககொணடார்கள். ஒவ்வொரு பாடசாலைகளிலும் இதன் நோக்கததைப் பரப்பிப் பெற்றோர்களுக்கு உதவி செய்யும்வண்ணம் சபையோரைக் காரியதரிசி திரு. த. இராசரத்தினம வேண்டிக்கொண்டார். ஸ்ரீமதி S. கங்கையா ஸ்ரீமதி P. வாளரசன் ஸ்ரீமதி கிறேப்ரன் ஆகியோர் பாடசாலைகளில் இதன நோக்கத்தைப் பரப்புவதாக வாக்குப்பண்ணியபின், தலைவர் திரு. ஆ. தனபாலசிங்கம், உப காரியதரிசி திரு. சி. சீவரத்தினம், இணைத் தனதிகாரி திரு. S. கார்த்திகேசு ஆகிய இவர்களால் இக்கூட்டத்திற்குப் பிரசன்னமாகமுடியாததைப்பற்றிய மனவருத்தத் தகவல்களும் வாசிக்கப்பட்ட பின்னர் சுமார் 6½ மணியளவிற் சபைகலைந்தது.

## அப்பர் சுவாமிகள் குருபூசைத் தினம்

சித்திரை மாதம் 9-ந் ௳ (22-4-55) வெள்ளிக்கிழமை இரவு மயிலிட்டி தெற்கு ஞானவயிரவராலய மண்டபத்தில் இளஞ்சைவத் தொண்டர் சபையாரால் அப்பர் சுவாமிகள் தினம் கொண்டாடப்பட்டது. மேற்படி விழாவுக்குத் திரு. ரி. வி. சிப்பிரமணியம் அவர்கள் தலைமை வகித்தார். தேவார பாராயணத்தின்பின் அப்பர் சுவாமிகளைப்பற்றித் தொண்டர்களான திரு. செ. கோவிந்தசாமி திரு. க. சிதம்பரநாதன், செல்வன் க. மகேஸ்வரன் ஆகியோர் மிகவும் சிறப்பாகச் சொற்பொழிவாற்றினர்கள்.

—0—

## உமாபதிசிவாச்சாரியர் குருபூசை

நாள்: மன்மத ௵ சித்திரை உகவ (4—5—55) புதன்கிழமை.

இடம்: யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள்:

இரவு 6½—7½ தமிழ்மறை ஓதல்.
திரு. V. சுப்பையாவும் கோஷ்டியாரும்.
7½ — 8½ "உமாபதி சிவாச்சாரியர்" என்னும் பொருள்பற்றிப் பிரசங்கம
திரு வே. சோமசுந்தரம் அவர்கள்

சைவாபிமானிகள் சமுகமளிப்பார்களாக

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம், 25-4-55.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்த நெருக்கடி தீர்க்க மருந்து

—0—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கையில் காப்பாற்றியவர் ஆறுமுகநாவலர் அவர்களே என்று கூறினர்.

அதன்பின் ஸ்ரீமத் வடிவேற்சாமி அவர்கள் ஆலய வழிபாட்டின் அவசியம் என்னும் விஷயத்தில் பேசும்போது இக்கால நிலைமையும் ஆலய வழிபாட்டுச் சிறப்புக்களையும் எடுத்துக்காட்டி அதன் இன்றியமையாமையை வற்புறுத்தினர்.

மாலை நிகழ்ச்சிகளுக்கு கௌரவ சு. நடேசன் அவர்கள் தலைமை வகித்தார். (அவருடைய தலைமையுரை பிறிதோரிடத்திற் காண்க.)

காரைநகர் இந்துக் கல்லூரி அதிபர் திரு. ஆ. தியாகராசா அவர்கள் "சைவசமயம்" என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் "சைவசமயத்தின் மகிமை எல்லாம் ஆதி சைவர்கள் சிவபூசையிலும் சிவனடியார்கள் தவத்திலுமே தங்கி இருக்கின்றன. சைவசமய அபிவிருத்திக்குரிய விடயங்கள் எவற்றையும் தீர்மானிக்க, பேச, சிவனடியார்க்கும், ஆதி சைவர்களுக்கும் மட்டுமே உரித்து உண்டு. ஏனையோர்கள் அதில் பிரவேசிப்பது சிவத்துரோகமாகும்" என்றார்.

அவர் தொடர்ந்து பேசும்போது "இன்று உண்மைச் சைவர்களைக்காண்பது மிகவும் அருமை. மனிதன் மனிதத்தன்மையி னின்று விலகி மிருக நிலைக்கு வந்துவிட்டான் என்று சொல்லல் சாலப் பொருத்தமானது கடவுள் வழிபாடு இன்று குறைந்து வருகிறது. போலிச் சைவம வளர்ச்சி யடைகிறது இதுவே நாஸ்திகத்தின் அஸ்திவாரம். என்று போலிச் சைவம்மாறி, உயர்ந்த உண்மைச் சைவ இலட்சணங்கள் உடையதாய் மக்கள் வருகின்றார்களோ அன்றே சைவம் உண்மை நிலை யடையும்" என்று சொன்னர்.

ஆலய விழாக்கள் உணர்த்தும்உண்மைகளும் அவற்றை நடாத்தும் முறையும என்னும் விஷயத்தில் பிரம்ம ஸ்ரீ. கு. பாலசுந்தரக் குருக்கள் அவர்கள் பேசும்போது திருவிழாக்களின் சிறந்த பொருள்களை எடுத்துக் காட்டி அவை எவ்வாறு நடாத்தப்பட வேண்டுமென்று விளக்கினர்.

தாயுமான சுவாமிகள் என்னும் பொருள்பற்றிப் பண்டிதர் இ நவரத்தினம் அவர்களும் திருப்பாசுரம என்பதுபற்றி, திரு. வே. சோமசுந்தரம் அவர்களும் பக்திச் சுவை உண்டாகுமாறு சிறந்த சொற்பொழிவுகள் ஆற்றினர்கள்.

சைவப்பிரசாரகர் திரு. த. குமாரசாமிப்பிள்ளை அவர்கள் மெய்கண்ட

## யாழ்ப்பாணம் இந்து மகாசபை இலவச வாசிகசாலை

மேற்படி வாசிகசாலையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 17 4-55 ஞாயிற்றுக்கிழமை காலை மேற்படி வாசிகசாலை மண்டபத்தில் திரு S. P. கந்தையா அவர்களின் தலைமையில் கூடப்பட்டது. சென்ற கூட்ட அறிக்கை என்னும் விடயம் எடுத்துக்கொள்ளப்பட்டபோது திரு. R C. மன்மதராயன் அவர்கள் சபையின் அங்கத்தவர்கள் உத்தியோக மாற்றங் காரணமாக பிற தேசங்களுக்குச் சென்றுவிட்டமையால் அறிக்கை வாசிக்க முடியாமலிருப்பதைச் சபையோருக்கு விளக்கியதுடன். சபையின் பணநிலை ஆதியவற்றையும் விளக்கிக் கூறினர். பின் புதுவருட உத்தியோகத்தர் தெரிவின்போது சபையின் போஷகராக திரு. C. சோமசேகரம் அவர்களும் தலைவராக திரு. S. வீரசிங்கம் ஆசிரியர் அவர்களும், உப தலைவர்களாகத் திருவாளர்கள் R. C மன்மதராயன், வை. இராமகிருஷ்ண ஆகியோரும் காரியதரிசியாகத் திரு V. சுப்பிரமணியம் அவர்களும் உப காரியதரிசியாக திரு R இராமநாதன் அவர்களும் வாசிகசாலைப் பொறுப்பாளராகத் திரு. K. பொன்னுத்துரை அவர்களும், தனதிகாரியாக திரு. நாசிறீவெங்கநாதன் அவர்களும கணக்குப் பரிசோதகராகத் திரு. V. கனகரத்தினம் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டதுடன் ஒன்பதுபேர் அடங்கிய நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன்விழா

இந்த ஆண்டு புரட்டாதித் திங்களில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பொன்விழா நடக்கவிருக்கின்றது. இவ்விழாவில் ஈழமக்கள் பங்கு பற்றும வழி வகுக்கும் பொருட்டு கொழும்பில் ஓர் கூட்டம கூட்டப்பெற்றது. அக் கூட்டத்தில் மதுரைத் தமிழ்ச் சங்க உபதலைவர் சேர். பீ. பி. இராஜன் அவர்கள் சமுகமளித்தார். சங்கத்தின் நோக்கங்களையும் பொன் விழாவின் விபரங்களையும் எடுத்துக் காட்டி அதில் தகுந்தவாறு பங்குபற்றுமாறு ஈழமக்களை அவர் கேட்டுக்கொண்டார்.

---

தேவர் என்னும் பொருள் பற்றிக் கதாப்பிரசங்கஞ் செய்தார். இசை இனிமையும் பொருள் வளமும் பொருந்திய இப்பிரசங்கம் யாவரையும் இருந்தபடி இருந்து கேட்டு இன்புறச் செய்தது.

அகில இலங்கைச் சைவமகாநாட்டின் மூன்றாநாள் நிகழ்ச்சிகளுக்கு ஸ்ரீமத் ஞா. சபாபதி தேசிகர் அவர்கள் தலைமை வகித்தார். அவர் தமது தலைமைஉரைநிகழ்த்தும்போது ஆறுமுகநாவலரின் பெயரைச் சொல்லிக்கொண்டு இன்று சிலர் எத்தனையோ விதமான செயல்களைச் செய்து வருகின்றனர். இன்று சாதிப்பாகுபாடு இல்லையென்று சிலர் கூறுகிறார்கள். நாவலர் பெருமான் சாதிவேறுபாடு இல்லையென்று எவ்விடத்தும் கூறவில்லை. சாதி வேறுபாட்டை எவரும் எதிர்க்க முடியாது என்றார்.

மேலும் அவர் பேசும்போது ஆங்கியர் ஆட்சிக்காலத்தில் இப்படியான கொடுமைகள் காணப்படவில்லை. அதன் பின்புதான் இத்தகைய கொடுமைகள் காணப்படுகின்றன. இனி வழிபாடு என்பது வேறு மந்திரம் என்பது வேறு மொழிச் சச்சரவு என்பது வேறு. இவற்றை இக்கால மக்கள் உணர்வதில்லை என்றார்.

## காலஞ்சென்ற திரு. வி. ஆசைப்பிள்ளை

திரு. வி, ஆசைப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியடியில் 4-4-55-ல் இவ்வுலக வாழ்வை நீத்தார். குவாலாலம்பூரிலே விக்ரோறியாக் கல்விக் கழகத்திலே கல்விபயின்று, மலாயா அரசாங்க உத்தியோகத்தில் ஐம்பத்தாறு ஆண்டுகளுக்குமுன் அமர்ந்து பெரும்பாலும் காணித் துறையில் பதவி வகித்துக் கடமைகளைத் திறம்பட ஆற்றிவந்தார். அவர் பூரணகால சேவைசெய்து சட்ட அறிவில் போராற்றல் வாய்ந்தவராகப் பாராட்டப்பட்டார்.

அவாது பிரிவால், காலஞ்சென்ற பீ வ தம்பி என்றழைக்கப்பட்ட திரு. வி கதிரவேற்பிள்ளை அவர்களின் மகளாகிய அவருடைய மனைவியாரும் புத்திரன் வழக்கறிஞர் திரு. ஆ தனபாலசிங்கம் (காரியதரிசி சைவபரிபாலன சபை) அவர்களும், புத்திரிகள் ஸ்ரீமதி பி. இராமலிங்கம். ஸ்ரீமதி பி ஸ்ரீகந்தா ஆகியோரும் பலசுற்றமித்திரும்வருந்துகின்றனர்.

அன்னருக்கு இறைவன் திருவருளால் ஆன்மசாந்தி உரியதாகுக.

---

24-4-55 சைவமகாநாட்டு நிகழ்ச்சிகள் அடுத்த இதழில் வரும்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1. காரைதீவு வடக்கு K, இராமுப்பிள்ளை பெண் தங்கமுத்து.
2. ஷையூர் காலஞ்சென்ற கார்த்திகேசு இராமுப்பிள்ளை.

வழக்காளிகள்.

எதிராக

இல, 6884

1. ஷையூர் அருணாசலம் சிவசம்பு
2. ஷையூர் நமசிவாயம் அருளையா பெண் நாகரத்தினம்
3. ஷையூர் நமசிவாயம் அருளையா

எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 6884 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுகாணிகள் 1955ம் ஆு வைகாசி மீ 31 ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் ஒன்பது மணிதொடக்கம் அந்தந்தகாணிக்குள் நின்று பிரசித்தவலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—

ரூபா 4000/= மும் அதற்கு 29–7–51 தொடக்கம் இறக்கும் வரை 5 வீதமான வட்டியும் – வட்டியில் ரூபா 425/= கொடுபட்டது கோட்டுச் செலவு 65–88.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக்கோவிற்பற்று வலந்தலையிறை "சூரியன்காடு" பா கி இல 6 3/4 பனைகள் வடலிகளும் வான்பயிர் செய்பயிர்களும் கல்வீடும் அடுக்களையும் எல்லை கிழக்கும் வடக்கும முதலாம் எதிராளிக்குரிய வாதனம், மேற்கு சின்னையா துரைராசசிங்கத்தி குரிய வாதனம் தெற்கு செல்லையா அருளம்பலத்திற்கும் பங்காளருக்குமுரியவாதனம், இதடங்கலும் இக் காணிக்குப் போக்குவரவு செய்வதற்காய் இக்காணியின் வடக்கெல்லைக்காணியின் மேற்கெல்லையருகால் விடப்பட்ட கையொழுங்கைப் பாவிப்புரித்தும்.

2. ஷை வலந்தலையிறை 'சூரியன் காடு' பா, கி, இல, 6 3/4 பனைகள் வடலிகளும் செய்பயிர் வான் பயிர்களும் எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு ஒழுங்கையும் முதலாம் எதிராளிக்குரியவாதனமும மேற்கு முதலாம் எதிராளிக்குரியவாதனம், தெற்கு செல்லையா அருளம்பலத்திற்கும் பங்காளருக்கும் உரிய ஆதனமும் ஒழுங்கையும்.

1955ஆு சித்திரைமீ 12-ம் திகதி

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.

M 18, 29, 29-4-55.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 11656

யாழ்ப்பாணம் பெரிய மாதாவிக் கோவில் ரோட்டு.
அலக்சான்டர் கிறிஸ்ரியன்

— வழக்காளி,

எதிர்

யாழ்ப்பாணம் பெரிய தெரு விறகுகாலை குத்தகைகாறன் ஹென்றி மரியாம்பிள்ளை அல்லது ஹென்றி பெரியதம்பி

எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11656ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955ஆு ஆனிமீ 14 உ செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த எலத்தில விற்கப்படும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோயிற்பற்று கரையூரிறை "அரியதுரையன்தறை" குழி $9\frac{1}{2}$ யும் கக்கூசும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு டேவிட் ரோட்டு வடக்கு யோண்பிள்ளை கைலாசம் பங்காளரும், மேற்கு அந்தோனி மகள் சவிரிமுத்து தெற்கு ஜே என். திசைவீரசிங்கிக்கும் பெண் அசத்தகம்மாவுக்கும், இக்காணியடங்கலும்.

வேறு விபரம் அறிய விரும்பினல் யாழ்ப்பாணம் சீதாரி பிறக்டர் T. அரியநாயகமிடம் அறியலாம்.

S. Ratnasabapathy
கொம்மிஷனர்,

51, 4th Cross Street
Jaffna, 25 4-55.
M. 27 29-4 (௲—200)

---

## யாழ்ப்பாணச் சிறைச்சாலை புதுவருட விழா

நிகழும் மன்மத வருடப் முதலாம்நாள் (14-4-55) வியாழக்கிழமை யாழ்ப்பாண சிறைச்சாலையில் புது வருடக் கொண்டாட்டம் நடைபெற்றது கடவுள் ஆராதனை செய்யப்பெற்று மறியற்காரர் ஒருவரால் சிவபுராணம ஓதப்பெற்றது. யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையாரால் 300 சைவமறியற்காரருக்கு தேநீர் விருந்தளிக்கப்பெற்றது. பின்பு திரு. பொ. அப்புக்குட்டி அவர்கள் தலைமையில் தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. திரு. வே. சங்கரப்பிள்ளை அவர்கள் 'மானிடப்பிறவியின் மகிமை' என்னும் பொருள்பற்றி ஓர் சிறந்த சொற்பொழிவாற்றினர். தலைவர் அவர்கள் மானுடப் பிறவிதானும் திரிகரண சுத்தியோடு அரனைபணிசெய்து உய்வதற்கே வகுக்கப்பெற்றதென்று வற்புறுத்தினர்.

---

## ஆபத்தான கோவா நிலைமை

இந்திய உலக சபையிலே கோவா சத்தியாக்கிரகிகளுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனைகள் பற்றிய பிரேரணை ஒன்று வாதிப்பதற்கென நிகழ்ச்சி நிறுத்தப் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டது. 28 ஆண்டுகள் வரையில் நீடித்துள்ளவையாகச் செல்லப்படும் தண்டனைகள் உண்மையானல் அவைகள ஆபத்தானவையே என்று குறிப்பிட்டு முதலமைச்சர்வருகையை எதிர்பார்க்கும் முறையில் தாம் அப்பிரேரணையை வைத்திருப்பதாகச் சபைத் தலைவர் குறிப்பிட்டார்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்
இல 10710

மானிப்பாய் சிவக்கொழுந்து முத்துக்குமாரசாமி

வழக்காளி

எதிர்

வண்ணார்பண்ணை மேற்கு சேகப்பா முகியதீன் பிச்சை.

எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 10710ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955ஆு ஆனி மீ 9 உ வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த எலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

வண்ணார்பண்ணை மேற்கு கற்குளம் கரையும் - பள்ளுவிலி தோட்டமும் செல்பரப்பு 14 குழி $\frac{1}{2}$ யும் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை வல்லிபுரமும் மாரிமுத்து தருமலிங்கத்தினுதனமும், வடக்கு வண்ணை வயித்தீஸ்வரன் கோவி லாதனம், மேற்கு அப்துல் காதிறு சுலுத்தான் அப்துல் காதிறுவுக்குடைய வாதனம், தெற்கு அப்புக்குட்டி சொக்கலிங்கத்தினுதனம், இதடங்கலும்.

வேறு விபரம் அறிய விரும்பினல் மானிப்பாய் பிறக்டர் சி. இராசேந்திரமிடம் அறியலாம்.

S. Ratnasabapathy,
கொம்மிஷனர்

51, 4th Cross Street,
Jaffna, 25-4-55
M 26 29.4 (௲ 200)

---

## கோட்டு வற்பனவு விளம்பரம்

இல 11787

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
நாரந்தனை வயித்திலிங்கம் சிவகுரு வழக்காளி

எதிராக

1. வேலணை கிழக்கு வயிரமுத்து கந்தையா
2. ஷையூர் பெண் மீனாட்சி

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11787-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னால் விபரிக்கபபடும இரண்டு துண்டுக் காணிகள் 1955 ம வருடம் வைகாசி மாதம் 21 ந் திகதி சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த எலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 929–77-ம் ரூபா 500 க்கு 11–10 54 தொடக்கம் 25-1-55 வரை 12 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச செலவும்.

காணி விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று நாரந்தனை பிறை "தம்பாட்டி" பா கி இல $22\frac{1}{2}$ கிணறும் தென்னைகளும் வடலிகளும எல்லை கிழக்கு கோயிலான் கைம்பெண் சின்னக்குட்டிக்கும் பொன்னையா பெண் நாகம்மாவிற்கும் உரிய ஆதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு சிவகுரு பெண பொற்கொடிக்கும் மறு பேருக்கும் உரிய ஆதனம் தெற்கு A வேலுப்பிள்ளை பெண் பாறுபதிக்கும் மறு பேருக்கும் உரிய ஆதனம்.

2 மேற்படி நாரந்தனையிறை "ஆவரம்புலம்" பா. கி. இல. 40 இதில் மேற்குப் பக்கமாய் பா கி. இல 7 குளி 4 3/8 கிணறும் எல்லை கிழக்கு இராமசாமிபெண் தனகாம்பிகைக்குரிய ஆதனம் வடக்கு ஒழுங்கை, மேற்கு ஒழுங்கையும் ஆறுமுகம் நாகமுத்து விற்குரிய ஆதனமும் தெற்கு முத்துசாமி பெண் பாக்கியதிறகும்பங்காளருக்கும் உரிய ஆதனமும் ஒழுங்கையும்.

1955 ம் ஆு சித்திரை மீ 6உ

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்

M30 29-4 (௲ 300)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சோகத்தின் நடுவே கண்ட தெய்விக வனப்பு

1-ம் பக்கத்தொடர்ச்சி

அரக்கியர் சூழலில் சீதை வெம்புலிக் குழாத்தின் நடுவே மான் போலத் தோற்றவளையும் மறைவாக இருந்து கண்டுகொண்டிருந்தபோது ஆரவாரத்துடன் அங்கே தோன்றினன் இராவணன். 'பன்மணி மகுடம் இளவெயிலெறிப்பக் கங்குலும் பகல்பட வந்தான்" என்று அவன் வரவைக் கவிதையுரிமையோடு சிறப்பிக்கிறான் கம்பன். எண்பதிற்கு மேற்பட்ட பாடல்களையுடைய இப்படலத்தில் (நிந்தனைப்படலம்) இராவணன் பிராட்டியை நோக்கி இழிந்த மொழிகளைக் கூறியிரப்பதும், அவற்றைச் செவியுற்ற பிராட்டி அவனை நிந்தித்து மொழிவதும் ஆகிய செய்திகள் கூறப்படுகின்றன. சில பிரதிகளில் இந்த நிந்தனைப் படலமே இல்லை. முன்பாதி காட்சிப் படலத்திலும், பின்பாதி உருக்காட்டு படலத்திலுமாக அப் பிரதிகளில் இப்படலச் செய்யுட்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இராவணன் வரவு கண்ட அனுமன் நன்றாக மறைந்து கொள்கிறான். சீதையின் முகத்தில் அச்சக்களை படர்கிறது. "தான் கைகூப்பி வணங்கும் ஈசனிடம்கூட இராவணன் அவ்வளவு இரந்துபணிந்து வழிபடு மொழிகள் கூறி அறியான். சீதாதேவியிடம் அதைக் காட்டிலும் பணிவும் குழைவும் தோன்றக் கூறி இரக்கிறான்" என்று அந்தக் காட்சியைக் கம்பன் கவிக்கூற்றாகச் சொல்லுகிறான்.

"ஈசற்கு ஆயினும்
ஈடுஅழிவற்று இறை
வாசிப் பாடுஅழி
யாத மனத்தினன்
ஆசைப் பாடும்
அந்நாணும் அடர்த்திடக்
கூசிக் கூசி
இனையன கூறினன்"
[நிந்தனைப்படலம் — 25]

ஈடு — பராக்கிரமம்
இறை — கொஞ்சமும்
வாசிப்பாடு — பெருமிதம்
கூசி — கூச்சப்பட்டு

இராவணனுடைய அசாத்தியமான இந்தப் பணிவிலும் தேவி இதைக் கேட்டுத் துரும்பெனக் கனன்று கூறும் சீற்றவுரையிலும் மனோபாவ அழகு செறிந்திருக்கின்றது. காவியம் என்று வரும்போது அது பிரத்தியட்ச வாழ்க்கையினும் உன்னதமானதாகத் தானே இருக்கவேண்டும். எனவே காவியத்தின் ஒவ்வோரணுவிலும் குணச்சித்தரிப்பில் அந்த அழகைச் செறிய வைத்திருப்பான் கவிஞன். அது அவன் கடமையும்கூட.

"வஞ்சனை நீசெய
வள்ளல் சீற்றத்தால்
எஞ்சலில் உலகெலாம்
எஞ்சும் எஞ்சும் என்று
அஞ்சுகின்றேன் இதற்கு
அறனும் சான்றரோ!" (48)

சீற்றம்—வெகுளி
எஞ்சல்இல்—மிகுதலில்லாத
சான்று—சாட்சி

என்று சீதை அறத்தைச் சான்றாக அழைத்து இராவணனை நிந்திக்கும்போது தர்மத்தின் பூரண சௌந்தரியம் அதில விளங்கக் காண்கிறோம். இதுகேட்டு இராவணன் அளப்பரிய சினங்கொள்கிறான். அச்சினங் கண்டு அனுமன் கூடச் செயல்மீறி இராவணன் ஏதாவது செய்து விடுவானோ என்றஞ்சினன். பின் மீண்டும் குழைவு தோன்றப் பேசுகிறான் இலங்கையர்கோன். நயமும் பயமும் காட்டிக் குழந்தையிடம் ஏமாற்ற முயலவது போலிருந்தது அவன் முயற்சி. இறுதியில் திரும்பிச் சென்றுவிடுகிறான் இராவணன். சீதையின் மனங் குலையாத திண்மையையும் நிந்தனை மொழிகளையும் இராவணன் குழைவும் அச்சுறுத்தலும் இகாண்டப் பெயருக்கு ஏற்ப இப்படலமும் ஒருவகையான தர்ம சௌந்தரியத்துடனேயே அமைந்துள்ளது. ●

* * * [வளரும்]

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

## இருவாரப் பலன்கள், 1—5—55 — 7—5—55

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

உம்முடைய பண நிலைமையில் இந்தவாரம் சில திருத்தங்களைக் கொண்டுவரும். உம்முடன் போட்டியிடுவோரை நீர் வெல்லக்கூடியதாயிருக்கும். வேலை மிகுதியாயிருக்கும். உம்முடைய நடைமுறைகளில் சில மாற்றங்களுமுண்டாகும்

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்.**

இந்தவாரம் உம்முடைய நண்பருடன் நீர் சண்டைதொடுக்க முந்துவீர். சில பிழை எண்ணங்களுண்டாகும். குடும்பச் சூழலில் நிலைமைகளும் நல்லாயிருக்கமாட்டா. ஒன்றையும் புதிதாய்த் தொடங்க வேண்டாம்.

**மிதுனராசி மிருகசிரிடம், 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

இந்தவாரம் உம்முடைய இடைஞ்சல்களுட் பலவற்றை நீர் நீக்கக் கூடியதாயிருக்கும். புது முயற்சிகள் விரும்பிய பலனைத் தரும். பண நிலைமைகள் திருந்தும். நீர் உம்முடைய கடன்களில் பலவற்றை நீக்குவீர்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

பணநிலைமைகள் திருந்தும். ஆனால் நீர் கொஞ்சமும் மிச்சம் பண்ணமாட்டீர். புது முயற்சிகள் உம்முடைய நேரத்தின் பெரும் பாகத்தை எடுக்கும். எதிர்ப்புநீங்கிவிடும். உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

புதுமுயற்சிகள் கவனமாகக் கையாளவேண்டும். சுந்தோர் நிலைமைகளும் வீட்டு நிலைமைகளும் அதிகம் நல்லாயிருக்கமாட்டா. முரண்பாடுகளைத் தவிர்க்கவேண்டுமானால் நீர் பொறுமை சாதித்துக் காரியங்களை விளங்க மிக முயல வேண்டும்.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

ஒரு நல்லவாரம். தேகசுகம் திருந்த வேண்டும் புது முயற்சிகள் காத்திராத நல்ல பலனைத் தரும், எதிர்ப்பு நீங்கும். நீர் விரும்புகிற ஒருவரைப்பற்றிச் சில நல்ல புதினங்களை நீர் அறிவீர்.

**துலாம்சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

ஒரு தளப்பமான வாரம், உம்முடைய நண்பரால் நீர் பிழையாய் எண்ணப்படுவீர். நீர் பழிக்காளாகப்படுவதற்கும் இடமிருக்கின்றது வார இறுதிக்குமுன் நீர் உமமுடைய சில நண்பரோடு அல்லது இனத்தவர்களோடு கோபிக்கக் கூடும்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம பாதம் அநுஷம், கேட்டை.**

உத்தியோகத் துறையில் நல்ல வாரம். புதுமுயற்சிகள் நல்லாய் முன்னேறிக் கொண்டிருக்கும். காணிப் பொருள்கள் மூலம் இலாபங்கள் நிச்சயம. ஆனால் குடும்பப் பகுதியில் சில குழப்பங்களிருக்கும் குடும்பச்சூழலில் சுகவீனம் உம்மை நிலைகுலைக்கக்கூடும்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்.**

இந்தவாரம்விசேட காரியங்களில் எந்த ஒரு தீர்மானஞ் செய்வதிலும் நீர்வருந்துவீர் பண நெருக்கடிகளுக்குமிடமுண்டு. ஆனால் குடும்பச் சூழலில் திருத்தங்கள் நிச்சயம், எதிர்ப்பு நீங்கும். வார இறுதிக்குமுன் நீர் சில புதினங்களைக் கேள்விப்படுவீர்.

**மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

வாரத்தின் முதல் இரு நாட்களும் உம்மை அதிகம் நிலைகுலைக்கக் கூடும் உம்முடைய துன்பங்களுக்குப்பழிமொழி பரப்புவோர்காரணராயிருப்பர். வாரமிகுதி நல்லதாயேயிருக்கும். குடும்ப சமாதானமும் புகழும் நிச்சயம்,

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

இந்தவாரம் உம்முடைய நண்பர் உமக்கு உதவியாயிருப்பர். சமுக சித்தியும் நிச்சயம் வார இறுதிக்கு முன் சில சிறந்த சித்திகளை நீர் பெறக்கூடியதாயிருக்கும். செவ்வாயும் புதனும் உம்மை ஒருசிறிது நிலைகுலைக்ககூடும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

இந்தவாரம் உம்முடைய திட்டங்களை நிறைவேற்றுக. நீர் காத்திராத ஒன்றைப் பெறுவீர். நண்பர் அதிக உதவியாயிருப்பர். வியாழன் வெள்ளி சனி ஒருசிறிது கோபமுண்டாக்கக்கூடும், ஆனால் அது பாரதூரமானதாயிராது,

## சௌஎன்லாய் நேருவே சமாதானம்

உருசிய முதலமைச்சர் புல்கானின் பத்திரிகை நிருபர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்துக்கொண்டிருந்து மதுபானஞ் செய்யத் தொடங்கியபொழுது "சமாதானம் சௌஎன்லாய் நேரு" என்று வேடிக்கையாகப் பாடிக்கொண்டே மதுபானஞ் செய்தாராம். சௌஎன்லாயும் நேருவுமே சமாதானத்தை உண்டாக்கக்கூடியவர்களென்பது இப்பொழுதுள்ள உருசிய அதிகாரிகளின் கருததாகும் என்று கருதப்படுகின்றது.

## இந்தியாவை வெல்லுதல் எவராலும் முடியாது

பெரும் பொருள் பொதிந்த சொற்களைப் பாண்டுங் மகாநாட்டிலே பண்டிதநேரு அவர்கள் உரத்துக்கூறி உலக வல்லரசுகள் இன்று உன்னவேண்டியது எது என்பதை இடித்துரைத்தார். அவர் பேசும்போது யுத்தம் உண்டாதலை எவ்வாற்றாலும் நீக்கவேண்டும் என்றும் என்னதான் நேர்ந்தாலும சமாதானத்தை நிலைநாட்ட இந்தியா இடைவிடாது ஊக்கமாய் உழைத்து வருமென்றும், ஆயுதங்களில்லாமலே தாங்கள் இந்தியாவைப் பாதுகாக்க முடியுமென்றும் ஆகையினாலே எந்த வல்லரசும் தனிததோ ஒருமித்தோ இந்தியாவை வெல்ல முடியாதென்றும் உறுதியாகக் கூறினார்.

உலக வல்லரசாயிருந்த பிருத்தானியாவை இந்தியா இவ்வாறு வென்றதென்பதை இன்றைய வல்லரசுகள் உன்னுதல் வேண்டுமென்றும் அவர்இடித்துரைத்தார்.

## இன்னிசைக் கதம்ப நிகழ்ச்சிகள்

பழை வீமன்காமம் கிராம முன்னேற்றச் சங்கக் கட்டிட நிதிக்காக 16-4-55 சனிக்கிழமை மாலை வீமன்காமம் ஆங்கில பாடசாலை மண்டபத்தில் வடமாகாண அதிபர் திரு. ஸ்ரீகாந்தா அவர்களின் தலைமையில் இன்னிசைக் கம்ப நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சங்கத் தலைவர் திரு. வே. தியாகராசா, அதிபரை வரவேற்றுப் பேசினார். அதிபர் பேசுமபோது கட்டிடத்திற்கு அடுத்த நிதி வருடத்தில் பணம் தருவதாகவும், அடுத்த வருடத்திற்குள் மின்சார வசதி செய்து கொடுப்பதாகவும், ஒழுங்கைகள் திருத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதாகவும உறுதி கூறினார்.

சர்வகலாசாலைப் பேராசிரியர் கலாநிதி வித்தியானந்தன் கிராம முன்னேற்றச் சங்கம் அதன் பயனகள் என்பவற்றை எடுத்துக்காட்டி இச்சங்கத்திற்கு வேண்டிய கட்டிடத்தை விரைவில் கட்டிமுடிக்க வேண்டுமெனக் கூறினார்.

பின்பு பலவகையான உயர்தர இசை நடன நாடக நிகழ்ச்சிகள் நடைபெற்றன.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

134,3670

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாறத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறுப்பர்.


rinted and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond residing at 245; Navalar Road Jaffna. for and on behalf ot the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna at heir Press, the Saiva Prakasa Press, Vannarpannai, Jaffna on Friday April 29, 1955.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org